# வருடாந்த அறிக்கையும் கணக்காய்வும்

## இலங்கை சமூகப் பாதுகாப்புச்




இல:18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய

பொருளடக்கம்

I. தொலைநோக்கு மற்றும் நோக்கக் கூற்று 01

II. தலைவரின் செய்தி 02

III. பொது முகாமையாளரின் செய்தி 03

IV. முன்னைய நாள் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் சமகால பணிப்பாளர் குழு 04

V. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை - ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 05

VI. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிகள் 06

1. **நிருவாகப்பிரிவு** 07

1.1 சபையின் அலுவலகத்தை உருவாக்குதலும் மாற்றங்களும் 07

1.2 அனுமதிக்கப்பட்ட ஊழியர்க் குழுவும் வெற்றிடங்களும் 07-10

1.3 அனுமதிக்கப்பட்ட ஊழியர்க் குழுவினரின் எண்ணிக்கையை அதிகரித்தலும் வெற்றிடங்களை நிரப்புதலும். 10

1.4 2012 அம் ஆண்டில் விலகுதலும் ஓய்வு பெற்று செல்லுதலும் 10

1.5 நிருவாகப் பிரிவின் சமகால அலுவலகக்குழு 11

1.6 பௌதீக வளங்கள் 11

1.7 தொடர்பாடல் வசதிகள் 11

1.8 போக்குவரத்து வசதிகள் 12

1.9 தற்பொழுதுள்ள வாகனம் தொடர்பான விபரம் 12

1.10 நிர்வாக பிரிவு 13

1.11 கணனி அலகு 13

1.12 2012 ஆம் ஆண்டு மேற்கொண்ட பணிகள் 14

**2. சமூகப் பாதுகாப்பு பிரிவு** **14**

2.1 சமூகப் பாதுகாப்பு பிரிவின் பிரதான பணிகள் 14

2.2 ஊழியர்க் குழு மற்றும் மாவட்ட அலுவலகங்கள் 15

2.3 உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள் 15-16

2.4 சமூகப் பாதுகாப்பு உத்தேச ஓய்வூதியத் திட்டம் 2012 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்டத்திலான ஆட்சேர்ப்பு 17

2.5 2012 ஆம் ஆண்டினல் பிரதிபலன்களைச் செலுத்துதல் 18

2.6 2012 ஆம் ஆண்டில் பங்களிப்பபுச் செய்பவர்களிடமிருந்து அறவிட்ட பணம் 18

2.7 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் 18

2.8 வழிநடாத்தல் பிரிவின் பிரச்சினைகள் 19

3 **நிதிப்பிரிவு** 19

3.1 பொதுவிடயங்கள் 20

3.2 நிதிப்பிரிவின் ஊரியர்க் குழு 20

4 **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு** 20

4.1 கடமைகள் 20-21

5. நன்றி 22

**இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை**

## தொலை நோக்கு

பயனுறுதியும் நிலையானதுமான சமூகப் பாதுகாப்பிற்கான தேசத்தின் முதன்மை நிறுவனமாதல்.

## நோக்கக் கூற்று

பங்கேற்றல் மற்றும் ஆக்கதிறனுடைய ஒழுங்கமைப்புச் சூழல் ஒன்றினூடாக, அரச பாதுகாப்பு உத்தரவாதம் கொண்ட மிகவும் பயனுடைய ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்தும் தேசிய நிறுவன அமைவினூடாக சிரேட்ட பிரசைகளின் வாழ்க்கை தரத்தைப் பாதுகாத்தல்.

## தலைவரின் செய்தி

ஆசியாவின் ஆச்சரியத்தை நோக்கிப் பயணம் செய்யும் இலங்கையில் ''சமூகப் பாதுகாப்பு'' என்பதை பொருளாதார சமூக, கலாச்சார மற்றும் ஆண்மீக தொலைநோக்கைக் கொண்ட பரந்த அடிப்படையில் காணல் வேண்டும். சிரேட்ட பிரசைப் பருவத்தைப் பொருளாதார ரீதியாகப் பாதுகாக்கும் உச்சதத்திற்குச் சென்று பிள்ளைகள், பெண்கள், பல்வேறு சேவையில் ஈடுப்படும் பிரிவினர், மாற்றுத் திறனாலிகள் போன்றோரைப் பொருளாதார அடிப்படையில் எல்லா விடயங்களும் தொடர்பாகக் கவனம் செலுத்தி ''மஹிந்த சிந்தனையின் எதிர்கால இலக்கின் சமூகப் பாதுகாப்பு'' தொடர்பான கொள்கையை பிரயோகரீதியாகச் செயற்படுத்துவதற்கு இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு உத்தேச ஓய்வூதியத் திட்டம் நவீன எதிர்காலம் வரை பரம்பிச் செல்கின்ற நாடலாவிய வேலைத் திட்டமொன்றாகும். இதில் அங்கத்தவர்களுக்குப் பிரதி பலனை உறுதிப்படுத்தல், நம்பிக்கையைப் பாதுகாத்தல், மூலதன ஆற்றலை விருத்தி செய்தல் என்பன மிக முக்கியமானவையாகும். 2012ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புச் சபையின் வளமான எதிர்காலப் பயணத்திற்கு அடித்தளம் இடப்பட்ட வெற்றிகர ஆண்டு ஒன்றாக அமைந்தது என்பதே எனது நம்பிக்கையாகும்.

1. தகவல் தொழினுட்பத் தொகுதியை மிகவும் பலப்படுத்தி புதிய தன்னியக்க மென்பொருளை உள்வாங்கியமை வேலைத் திட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை வெற்றயடையச் செய்யவும் தலைமையகத்தையும் மாவட்ட அலுவலகங்களையும் வலையமைப்பினூடாக இணைத்து செயற்படுத்துவதற்கும் உதவியது.
2. மிகச் சிறந்த உறுதிப்பாடும் பிரதிப்பலனும் கொண்ட ''சுரக்கும'' உத்தேசத் திட்டத்தைச் செயற்படுத்தல் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்து பெண் பிள்ளைகளின் சர்வதேசத் தினத்திற்குச் சமமாக ''ஆரஸ்ஸாவ'' முன் திட்ட சமூகப் பாதுகாப்புப் பிரதிபலன் உத்தேசத் திட்டத்தை அறிமுகஞ் செய்து வைத்தல்.
3. தவணைக் கட்ட நடவடிக்கைகள் மற்றும் அங்கத்தவர்களின் கணக்குகளை செற்றைப்படுத்தல் என்பவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அச் செயன் முறைகளை வலுவூட்டுதல் அத்துடன் முதலீட்டு நடவடிக்கைகளை மிக பாதுகாப்பு உடையதாகவும் பணனுறுதி மிக்கதாகவும் அமைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. அலுவலக முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தொடர்ந்தும் மாற்றமடைவதனால் அங்கத்தவர்கள் எதிர்நோக்குகின்ற வசதியீனங்களைத் தவிர்த்து அங்கத்தவர்களுக்கான சேவை நடவடிக்கைகளை வசதியுடையதாக அமைத்தல், அலுவலகத்தில் வசதிகளை ஏற்படுத்துதல், நிறுவனத்தின் சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுடன் சமூகப் பாதுகாப்புச் சபைக்கே சொந்தமான கட்டிடமொன்றில் தலைமை அலுவலகத்தை அமைப்பதற்கு அடிப்படையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் போது மேன்மைதகு சனாதிபதி திரு.மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வழங்கிய தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை இங்கு விசேடமாக ஞாபகப்படுத்துகின்றேன். நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் வழங்கிய ஒத்துழைப்பு மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள், சமூக சேவை அதிகாரிகள், போன்ற அரசாங்க அதிகாரிகள் வழங்கிய தலையிடல் அதே போன்று பணிப்பாளர் குழு மற்றும் மொத்த அலுவலக ஊழியர்களும் வழங்கிய அர்ப்பணிப்பு, ஒத்துழைப்புக்களுக்கான பெருமதிப்பைத் தெரிவிப்பதற்கு இதை நான் சந்தர்ப்பமாக கருதுகின்றேன்.

சமூகப் பாதுகாப்பை இலங்கையின் அரச கொள்கை ஒன்றாக, தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் ஒன்றிணைந்துச் செயற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இதனூடாக சனத் தொகைக் கட்டமைப்பினுள் சிரேட்ட பிரஜைகளின் சனத் தொகை உயர்வடைந்து செல்வதனால் அனுபவிக்க நேர்கின்ற எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆற்றலை பெறலாம் எனலாம்.

எனவே இத் தேசியக் கடமையை நிறைவேற்றுவதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பைத் தொடர்ச்சியாக எதிர்பார்க்கின்றேன்.

சட்டத்தரணி சுமனா ஆரியதாச
தலைவர்
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

## பொது முகாமையாளரின் செய்தி

மக்கள் சனத்தொகைக் கட்டமைப்பினுள் முதியோா் சனத்தொகை வீதம் துரிதமாக அதிகரித்துச் செல்லல், பொருளாதார, அரசியல் மற்றும் சமூகச் சூழல் காரணிகளில் ஏற்பட்டுள்ள நவீன போக்கு என்பன தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது சமூகப் பாதுகாப்பை இலங்கையில் விசேட கவனம் செலுத்தி பிரதான விடயமாகக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டிய துறை ஒன்றாக மாறியுள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்பட்டு இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை செயற்படுத்திவருகின்ற சமூகப் பாதுகாப்பு உத்தேசத் திட்டத்தினூடாக 60 வயது முதல் ஓய்வூதியம், ஓய்வூதியக் காலத்தில் மரணப் பணிக்கொடை, பகுதி மற்றும் முழு முடமாதலுக்கான பிரதிபலன் என்பவற்றை உறுதிப்படுத்தியுள்ளது.

2012ஆம் ஆண்டில் தன்மூலதன ஆற்றலின் அடிப்படையில் மிகவும் வலுவுள்ள விடயமாகச் செயற்படுத்த முடிகின்ற "சுரக்கும" உத்தேசத் திட்டத்திற்காகப் புதிய அங்கத்தவா்களைச் சேர்த்துக் கொள்ளல் மேற்கொள்ளப்பட்டது. விடேமாக இன்றுரை அங்கத்துவம் பெற்றுள்ள செயற்படா நிலையில் உள்ள அங்கத்தவர்கள் தொட்பாகக் கவனம் செலுத்தி அவா்களை மீளச் செயற்படச் செய்தல் மற்றும் அங்கத்தவா் பிரச்சினைகளை தீா்த்தலின் நடமாடும் சேவையை நாடு முழுவதிலும் செயற்படுத்துதல் என்பவற்றுடன் தவணைப் பணம் சேகரித்தலைச் செயற்திறனுடனும் முறையாகவும் மேற்கொள்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய அலுவலகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன் இன்நாகும் போது முல்லைதீவு, மன்னாா், எனும் மாவட்டங்களை தவிர ஏனைய மாவட்டங்களில் மாவட்ட செயலகங்களில் சமூகப் பாதுகாப்புச் சபையின் மாவட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 19 மாவட்ட அலுவலகங்களுக்கு கணனித் தொகுதி வலையமைப்பு மேற்கொள்ளப்பட்டு சேவை நடவடிக்கைகளை பரவலாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மிகவும் உயா்ந்த செயல்திறனுடன் செயற்படுத்த முடிகின்ற புதிய கணனி மென்பொருள் தொகுதியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டில் 90% அளவில் வெற்றியளித்ததுடன், அதனூடாக மொத்த சேவை நடவடிக்கை உயா் செயல்திறனுடன் செய்வதற்கான ஆற்றல் கிடைத்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் இச் சபையை புதிய திருப்புமுனை ஒன்றிற்கு இட்டுச் செல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்கி வழிகாட்டிய தலைவி சட்டத்தரணி திருமதி.சுமனா ஆரியதாச அவா்களுக்கும் பணிப்பாளா் சபைக்கும் மற்றும் அா்ப்பணிப்புடன் செயற்பட்ட எல்லா ஊழியா்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய உத்தேசத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்கிய மாவட்ட செயலாளா்கள், பிரதேச செயலாளா்கள், சமூக சேவை அதிகாரிகள், கிராம சேவகா்கள், மற்றும் ஏனைய ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன் அவா்களை பெருமதிப்புடன் ஏற்றுக் கொள்கின்றேன்.

தம்மிக்க பாதுக்க
பொது முகாமையாளா் (பதில் கடமை)
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

**முன்னைய தலைவர்கள்**

**பெயர்**

- திருமதி.வீ.ஜெயராஜசிங்கம்
- திரு.எஸ்.காரியவசம்
- திரு.கே.ஜயலத்
- தி.ரு.ஆர்.எம்.டி.பி..போகஹகுபுர
- திரு.ஆனந்த கால்லே ஆராச்சி
- திரு.டி.கே.ஆர்.வீரசேகர
- திரு.லக்ஷ்மன் ஹிரிமுதுகொட
- திரு.சுனில் சமரவீர(பதில் கடைமைபுரியும்)
- திரு.சரத் கீர்த்திரத்ண
- திரு.நிமல் சந்திர அமரசிங்க

**முன்னைய பொது முகாமையாளர்கள்**

**பெயர்**

- திரு.ரணதுங்க ஹேமசந்திர
- திரு.அசோக பீரிஸ்
- பி.ஏ.சோமபால
- திரு.கே.ஜு.ஜு.விஜேவர்தன
- பீ.ஈ.சீ.நேசைய்யா
- ஜே.எம்.விஜேரத்ன
- என்.ஜே.பத்திரன
- கே.என்.ஜே.குரே

**சமகால பணிக்குழு**

| பெயர் | பதவி |
|---|---|
| ★ திருமதி. சட்டத்தரணி சுமனா ஆரியதாச | தலைவர் |
| ★ திரு.மொன்டேகு சரச்சந்திர | செயற்படுத்தல் பணிப்பாளர் |
| ★ திரு.லால் வீரசிங்க | பணிப்பாளர் |
| ★ திரு.எல்.ஏ.ரூபசிங்க | பணிப்பாளர் |
| ★ திரு.ஆர்.எம்.எஸ்.பீ.எஸ்.பண்டார | பணிப்பாளர் |
| ★ திரு.மஹிந்த பண்டார | பணிப்பாளர் |
| ★ திரு.ஜே.டி.விஜேகோண் திஸானாயக்க | பணிப்பாளர் |

**இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை - கட்டமைப்பு**



### இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிகள்

அரச ஓய்வூதிய உரிமை இல்லாதவா்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பிரதிபலனைப் பெற்றுக் கொடுப்பது இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பணியாகும்.

1996ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்பு சபைச் சட்டத்தின் நடவடிக்கைகளுக்கு அமைய 2006ஆம் ஆண்டு செப்தம்பா் 25ஆம் திகதி உடைய 1464/5 ஆம் இலக்க அதி விசேட வா்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட உத்தேசத் திட்டங்கள் 06உம் செயற்படுத்தப்பட்டது.

பொருளாதார ரீதியாக பயனள்ள திட்டங்களைச் செயற்படுத்ததல் மற்றும் அங்கத்தவா்களுக்கு உயா்வானதும் பாதுகாப்பானதுமான ஓய்வூதியம் ஒன்றின் அரவணைப்பை வழங்குதல். முன்னா் போன்றே சமகாலத்திலும் “ சுரக்கும” உத்தே திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 18 வயது முதல் 59 வயது வரை அரசாங்க ஓய்வூதியம் இல்லாதவா்களுக்கு உத்தேச ஓய்வூதியத் திட்டத்திற்காகப் பங்களிப்புச் செய்ய முடிவதுடன், தவணைப் பணம் செலுத்தும் ஆற்றலுக்கு அமைய அங்கத்தவா்களுக்கு தேவையான அளவில் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள முடியும்.

2012 ஒக்டோபா் 11ஆம் திகதிக்குப் பெயா் இடப்பட்டிருந்த பெண் பிள்ளைகளின் சா்வதேச தினத்தன்றே “ ஆரஸ்ஸாவ” எனும் முன்திட்ட சமூகப் பாதுகாப்புப் பிரதிபலன் உத்தேசத் திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டது. இந்த உத்தேச திட்டத்தில் 18 வயதை விடக் குறைந்த பிள்ளைகளை அவா்களின் பெற்றோா் பொறுப்பாளா் பொறுப்பு கூறலின் கீழ் அங்கத்தவராக்க முடியும் என்பதுடன், 18 வயது பூரணமானதும் அவா்களை “ சுரக்கும” உத்தேச ஓய்வூதியத் திட்டத்திற்கு மாற்றி கணக்கில் உள்ள மீதிக்கு ஏற்ப ஓய்வூதிய உரிமை வழங்கப்படும்.

### உத்தேசத் திட்டத்தின் பிரதிபலன்

- 60 வயது முதல் வாழ்கின்ற காலம் முழுவதிலும் அங்கத்தவருக்கு மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- அங்கத்தவா் ஓய்வூதியம் பெறுபவராக இருக்கும் போது இறந்து விட்டால், அன்று முதல் அங்கத்தவா்களின் வயது 80 பூரணமாகும் வரை துணையாளருக்கு ஓய்வூதியத்தை செலுத்துதல்.
- நிலையான பகுதி முடமாதல் ஒன்றின் போது வயதிற்கு ஏற்ப பொருந்தச் செய்யப்பட் ரூபா.25000/- வரை பணிக் கொடையும் உரிய தவணைப் பணத்தை செலுத்துவதனால் 60வயது முதல் ஓய்வூதியம்.
- நிலையான முழு முடமாதல் ஒன்று நிகழும் போது வயதுடன் பொருந்தச் செய்யப்பட்ட ரூபா. 50000/- வரை பணிக் கொடை தேறிய பங்களிப்புப் பணமும் அல்லது முடமான தினத்திலிருந்து செலுத்தும் மாதாந்த ஓய்வூதியம்.
- ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னா் அங்கத்தவா் இறந்து விட்டால் தங்கி வாழிபவா்களுக்கு ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற பணிக்கொடை ஒன்றைப் பெற்றுக் கொடுத்தல்.

உத்தேசத் திட்டத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளுவது சபையின் தலைமை அலுவலக, மாவட்ட அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தா்கள் மூலம் மேற்கொள்ளலாம்.

தவணைப் பணம் செலுத்துவது:- இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய செமிப்பு வங்கி, தபால் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட கிராம அதிகாரிகள் மூலம் மற்றும் இச் சபையின் அலுவலகத்தின் கூலம் மேற்கொள்ள முடியும்.

# 1 நிருவாகப் பிரிவு

## 1.1 சபையின் அலுவலகத்தை தோற்றுவித்தலும் மாற்றங்களும்

1996ஆம் ஆண்டு சுவசிரிபாயவில் சுகாதார, பெருந்தெருக்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சில் 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் நிறுவனம் உருவாக்கப்பட்டது 1996ஆம் ஆண்டு முதலாவது பணிப்பாளர் கூட்டம் நடைபெற்ற பின்னர் சமூகப் பாதுகாப்புச் சபை உருவாக்கப்பட்டது, இதன் பின்னர் பொரல்லையில் அமைந்துள்ள சமூக சேவை அமைச்சுடன் ஒன்றிணைந்ததாக சமூகப் பாதுகாப்புச் சபை உருவாக்கப்பட்டிருந்தது.

1997 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கொழும்பு 06, காலி வீதி , இல: 585 எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடம் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் வாடகைக்குப் பெறப்பட்டு, இரண்டாம் கட்ட நடவடிக்கைக்காக சபையின் அலுவலகம் அங்கு அமைக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டது. 2003.07.01 ஆம் திகதி முதல் நுகேகொடை , நாவலை வீதியில் அமைந்துள்ள இலக்கம் 150ஏ எனும் இடத்தில் இதன் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. 30.04.2010 ஆம் திகதி முதல் சமூகப் பாதுகாப்புச் சபை நிதி மற்றும் திட்மிடல் அமைச்சுடன் இணைந்ததாக 01.12.2010 ஆம் திகதி முதல், இல: 125, நாவல வீதி, நாராஹேன்பிட,கொழும்பு-05 எனும் இடத்தில் அலுவலகம் உருவாக்கப்பட்டது. மேலும் முல்லைத் தீவு, மன்னார், ஆகிய மாவட்டங்களை தவிர ஏனைய மாவட்ட செயலகங்களிலும் சமூகப் பாதுகாப்புச் சபை தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 1.2 அனுமதிக்கப்பட்ட ஊழியர் குழுவும் வெற்றிடங்களும்

மேன்மை தங்கிய ஜனாதிபதியின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கைக் (கமிட்டியின்) குழுவின் தலைவரின் இலக்கம் எஸ்.ஆர்.35/339 மற்றும் 1997 ஜுலை 17 ஆம் திகதியைக் கொண்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்டிருந்த ஊழியர் குழுவைச் சேர்த்துக் கொள்வதை பல கட்டங்களாகப் பிரிக்குமாறும் 1997 ஆம் ஆண்டினுள் 56 பதவி நியமனங்களை மேற் கொள்வது மாத்திரம் போதுமானதே என சிபார்சு செய்யப்பட்டிருந்தது.1997 ஆம் ஆண்டு செப்தம்பர் 03 ஆம் திகதி நடைப்பெற்ற கூட்டத்தின் போது ,அமைச்சரவையின் மூலம் அந்த சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது மேலும் ஊழியர் குழு எண்ணிக்கைக்கு 159 பேர் வரை புதிதாகச் சேர்த்துக் கொள்வதற்கும் சபையின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கு அமைய பின்னர் திறைசேரியின் மூலம் ஊழியர் எண்ணிக்கைக்கு புதிதாக 88 பேர் வரை சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.1999 ஆம் ஆண்டு முதல் காலத்திற்குக் காலம் ஊழியர்களின் மாற்றும், கேட்டு விலகுதல் என்பன காரணமாக வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுவதுடன் தற்போது 105 ஊழியர்களே சேவையில் உள்ளனர். பதவிகளுக்கு அமைய அந்த ஊழியர்களின் எண்ணிக்கை பகிரப்பட்டுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. பணிக் குழுவினர் தொகை போதாமையினால் நிறுவனத்தின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகின்ற மட்டத்தை அண்மிக்காததனால், நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக 180 நபர்கள் கொண்ட புதிய பணிக்குழுவினருக்கான அனுமதி வழங்கப்பட்டு உள்ளதுடன் உரிய ஆட்சேர்ப்பு விதி முறைகளைத் தயாரித்து சம்பளங்கள் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 14.09.2012 ஆம் திகதி முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் மூலம் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஆட்சேர்ப்பு விதிமுறையை அனுமதித்துள்ளது. துற்போது உள்ள பதவிகளை உள்வாங்கி நிலவுகின்ற பதவி வெற்றிடங்களைப் பூரணப்படத்துவதற்கு ஆட்சேர்ப்பு விதிமுறைகளை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| பதவிகள் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | இருக்கின்ற எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | 01 | - | 01 |
| பிரதி பொது முகாமையாளர் (ச.பா) | 01 | 01 | - |
| பிரதி பொது முகாமையாளர் (நிதி) | 01 | - | 01 |
| உதவி பொது முகாமையாளர்(நிதி) | 01 | 01 | - |
| உதவி பொது முகாமையாளர்(காப்புறுதி/ஓய்வூதியம் ) | 01 | - | 01 |
| உதவி பொது முகாமையாளர் (ச.பா) | 01 | 01 | - |
| உதவி பொது முகாமையாளர் (நிர்வாகம்) | 01 | - | 01 |
| உள்ளகக்கணக்காய்வு அதிகாரி | 01 | 01 | - |
| கணக்காய்வு அதிகாரி | 01 | - | 01 |
| முகாமையாளர் (நிர்வாகம்) | 01 | 01 | - |
| முகாமையாளர் (தொழில்நுட்பம்) | 01 | - | 01 |
| முகாமையாளர் (விற்பனை) | 01 | 01 | - |
| முகாமையாளர் (உறுதி சேவை) | 01 | 01 | - |
| முகாமையாளர் (காப்புறுதி) | 01 | 01 | - |
| முகாமையாளர் (ஓய்வூதியம்) | 01 | 01 | - |
| முகாமையாளர் (நிதி) | 01 | 01 | - |
| முகாமையாளர் ( வசூல்) | 01 | - | 01 |
| சிரேஷ்ட இணைப்பாளர் | 06 | - | 06 |
| உள்ளகக்கணக்காய்வாளர் | 02 | 02 | - |
| மாவட்ட இணைப்பாளர்கள் | 49 | 27 | 22 |
| புலனாய்வு அலுவலகர் | 02 | - | 02 |
| தரவு கட்டுப்படுத்துனர் | 01 | - | 01 |
| கணக்குப் பதிவாளர் | 02 | 01 | 01 |
| கணனி வேலைத்திட்ட உதவியாளர் (வன்பொருள்) | 01 | 01 | - |
| கணனி வேலைத்திட்ட உதவியாளர் (மென்பொருள்) | 01 | - | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 57 | 32 | 25 |
| சாரதி | 09 | 07 | 02 |
| அலுவலக உதவியாளர் | 34 | 24 | 10 |
| **மொத்தம்** | **180** | **104** | **76** |

## ஒப்பந்த அடிப்படையில் சேவையில் உள்ளவர்கள்

| | |
|---|---|
| ♦ கணக்கீட்டு அதிகாரி | 01 |
| ♦ இணைப்பாளர் | 06 |
| ♦ முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| ♦ வாகன ஓட்டுநர் | 01 |
| ♦ அலுவலக உதவியாளர் | 05 |
| **மொத்தம்** | **19** |

## 1.3 அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை அதிகரித்தலும் வெற்றிடங்களை நிரப்புதலும

சபையின் செயல் திறனும் செயலடைவுப் பெறுபேறும் குறைவதற்குப் பிரதான காரணம் இவ்வாறான உத்தேச திட்டத்தில் இருக்க வேண்டிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்து உரிய பொறுப்புக்கள் சரியாக ஒப்படைக்கப்பட்டமை மற்றும் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் அத்தியாவசிய பதவிகளுக்கு கூட வெற்றிடங்கள் நிலவுவதுமாகும்.

## 1.4 2012 ஆம் ஆண்டு விலகி செல்லல்களும் ஓய்வுப் பெற்று செல்லல்களும்

| பெயர் | பதவி | |
|---|---|---|
| ★ திருமதி. தர்ஷிகா சியாமலி | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.எம்.மொஹமட் ஷா | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திருமதி.நிரோஷ லக்மாலி | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.எம்.பீ.எஸ்.ஹிடிபண்டார | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.என்.ஜீ.சமன் விஜேசிறி | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.நந்தகுமார | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.டி.பியரத்ன | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திருமதி.சதுரங்கி ஜயலால் | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.இந்திக அருணசாந்த | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திருமதி. நிரோஷா மல்காந்தி | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திருமதி.சமன் குமாரி | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.சமிந்த ஞாவிக்ரம | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திருமதி.தில்ருக்ஷி விஜேவர்தன | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.சமிந்த ரெகோகம | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திருமதி.ஜீ.எம்.பந்துதிலகா | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.என்.ரதன் | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ ஜே.ஏ.ஐ.சமன்குமாரி | மாவட்ட இணைப்பாளர் | - இராஜினாமா |
| ★ திரு.நிமல் ரத்னவீர | முகாமைத்துவ உதவியாளர் | - இராஜினாமா |
| ★ செல்வி. காஞ்சனா பதிராஜ | பிரதிதியோக உதவியாளர் | - சேவைணை விட்டு செல்லல் |
| ★ திரு.டி.டி.யு.புஞ்சி மஹத்தயா | அலுவலக உதவியாளர் | - இராஜினாமா |
| ★ திரு. எம்.எம்.கயான் சம்பத் | அலுவலக உதவியாளர் | - சேவைணை விட்டு செல்லல் |

### 1.5 நிர்வாகப் பிரிவின் சமகால ஊழியர் குழு பதவிகள்

| பதவிகள் | இருக்கின்ற தொகை |
|---|---|
| ★ உதவி பொது முகாமையாளர் (நிர்வாகம்) - பதில் கடமை | 01 |
| ★ முகாமையாளர்(நிர்வாகம்) | 01 |
| ★ பிரத்தியேக உதவியாளர் | 02 |
| ★ எழுதுவிளைஞர் | 02 |
| ★ அலுவலக உதவியாளர் | 01 |
| ★ செய்தி கொணடு செல்பவர் | 01 |
| ★ சாரதிகள் | 07 |
| **மொத்தம்** | **14** |

### 1.6 பௌதீக வளங்கள்

தலைமை அலுவலகம் - 8800 வர்க்க அடிப் பரப்பினுள் 03மாடிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலகம் - முல்லைதீவு, ,மன்னார் ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த மற்றைய மாவட்ட அலுவலகங்களுக்காக இடவசதியைப் பெற்றுக் கொண்டு, பெயர் பலகை, தொலை தொடர்பு வசதி, அலுவலக மரத்தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.7 தொடர்பாடல் வசதிகள்

நிறுவனத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்த தொலைத் தொடர்புத் தொகுதியை மேலும் முன்னேற்றி எல்லாப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் புதிய கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காகப் பொதுத் தொலைபேசித் தொடர்புகள் 03உம் தொலைநகல் வசதியுடன் பொருத்தப்பட்டுள்ளது. தற்கு மேலதிகமாகப் பின்வருமாறு நேரடி தொலைபேசித் தொடர்பும் பெறப்பட்டுள்ளது.

1. தலைவர் - நேரடி தொலைபேசி 01, தொலைநகல் இலக்கம் 01
2. செயற்பாட்டுப் பணிப்பாளர் - நேரடி தொலைபேசி 01, தொலைநகல் இலக்கம் 01
3. பொது முகாமையாளர் - நேரடி தொலைபேசி 01
4. பிரதி பொது முகாமையாளர் (02) - டெலி பெக்ஸ் 02
4. உதவி பொது முகாமையாளர்(03) - தொலைபேசி 03
6. உள்ளகக் கணக்காய்வாளர் - தொலைபேசி 01
7. தபால் நடவடிக்கை - தொலைபேசி 02
8. நேரடி (டெலி) விற்பனைப் பிரிவு - தொலைபேசி 01

அவ்வாறே 22 மாவட்ட அலுவலகங்களுக்காக நேரடி தொலைத் தொடர்பு இணைப்புகளும் பெறப்பட்டுள்ளன.

## 1.8 போக்குவரத்து வசதிகள்

சபையின் வேலைகள் ஆரம்பித்த சந்தா்ப்பத்தில் சமூக சேவைத் திணைக்களத்திலிருந்து கடனாகப் பெற்ற இரு வாகனங்கள் இச் சபையின் பணிகளுக்காக உபயோகப்படுத்தப்பட்டது, அதன் பின்னா் மேலதிகமாக இரு வாகனங்களும் சமூக சேவை அமைச்சிலிருந்து பெறப்பட்டுள்ளது.1997/98 ஆம் ஆண்டுகளில் 05 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவ் வாகனங்கள் அனைத்தையும் ஓடும் நிலையுல் பேணுவதற்காக உயா் புதுப்பித்தல் செலவை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. 2006 ஆம் ஆண்டு முடிவடையும் காலக்கட்டத்தில் கூட சபையிடம் 07 வாகனங்கள் மாத்திரமேயாகும். அவை தற்போது இயங்கும் (ஓடும்) நிலையில் உள்ளன. நடமாடும் சேவை மற்றும் களச் செயற்பாடுகளுக்காக இதைவிடக் கூடுதலான போக்குவரத்து வசதிகள் தேவைப்பட்டாலும் கடந்த 10 வருட காலத்தினுள் அதற்காக புதிதாக எந்த ஒரு வாகனமும் பயன்படுத்தப்படவில்லை. பல சந்தா்ப்பங்களில் புதிய வாகனத் தேவையை எடுத்துக் காட்டப்பட்ட போது 2008 ஆம் ஆண்டு நிதி அமைச்சுக்கு வாகனமொன்றை பெற்றுதருமாறு வேண்டுகோள் ஒன்று வைக்கப்பட்ட பின்னா் சுங்க பிரிவிடம் இருந்து விடுவிக்கப்பட்ட வாகனமொன்றை பெற்றுக் கொள்ளும்படி உபதேசம் வழங்கப்பட்டது. அதற்கமைய மோட்டா் வாகனமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. 2010ஆம் ஆண்டில் 02 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், பணம் ஒதுக்கப்பட்ட பின்னா் மைக்ரோ நிறுவனத்தின் மூலம் 02 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

250-6090 கெப் வாகனம் மற்றும் 32-4987 பாத் பைன்டா் மிகவும் பழைய நிலையில் காணப்படுவதனால், அவ் வாகனங்களை ஏலத்தின் ஊடாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.9. தற்போது இருக்கின்ற வாகனங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வாகன இலக்கம் | வகை | முதல் பதிவு செய்த திகதி | மிகவும் நன்று | நன்று | புதுப்பிக்கப்பட்டு ஓடும் நிலையில் உள்ளன | முட நிலையில் உள்ளன | கராஜில் வைக்கப்பட்டுள்ளது |
|---|---|---|---|---|---|---|---|
| 250-6095 | டபல் கெப் | 1997.10.24 | | | √ | | |
| 252-5463 | டபல் கெப் | 1998.08.14 | | | √ | | |
| 253-2796 | லயிட் எஸ் | 1999.07.06 | | | √ | | |
| 253-2818 | கெரவேன் | 1999.07.06 | | | √ | | |
| KH- 4506 | காா் | 2008.09.30 | | விபத்துக்குள்ளாகி ஓட்டுவதற்கு பொறுத்தமற்றதனால் அகற்றப்பட்டுள்ளதுடன் காப்புறுதி நட்டஈடும் கிடைக்கவுள்ளது | | | |
| KN- 0014 | மைக்ரோ ஜீப் | 2011.01.13 | | √ | | | |
| KN- 0006 | மைக்ரோ ஜீப் | 2011.01.13 | | √ | | | |

## 1.10. நிருவாக பிரிவு

**விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்.**

- **மனித வளப் பற்றாக்குறை**

1. அனுமதிக்கப்பட்ட மனிதவலு மதிப்பீட்டுக்கு அமைய ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறையைத் தயாரித்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல், பயிற்சி அளித்தலும் அபிவிருத்தியும்.

- **பௌதிக வளப் பற்றாக்குறை**

1. மீள் தயாரிப்புச் செயன்முறையை முறைசார் நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தல்.
2. தம் வசம் உள்ள வாகனங்களிடையே அதிகளவில் பழைய வாகனங்கள் உள்ளதால், புதுபித்தல் செலவு அதிகளவில் நிகழ்கின்றது. இதனால் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல்.
3. மாவட்ட அலுவலகங்களுக்கு சேவை நடவடிக்கைகளைப் பரவலாக்கம் செய்வதற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றமையினால், பௌதீக மற்றும் மனித வளத்தேவைகளை நிறைவு செய்தல்.

## 1.11. கணனி அலகு

**பிரதான பணிகள்**

1. நிறுவனத்தில் மேற்கொள்ள்படுகின்ற அனைத்து வழிநடாத்தல் செயற்பாடுகளுக்கும் உரிய எல்லா விடயங்களும் கணனித் தொகுதியினால் மேற்கொள்ளப்படும் போது எழுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தல்.
2. நிறுவனத்தினுள் இருக்கின்ற அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலகங்களின் உத்தியோகத்தர்கள்,அங்கத்தவர்கள் விசாரணை செய்கின்ற தகவல்களைத் தாமதம் இன்றி செயல்திறனுடன் பெற்றுக் கொடுத்தல்.
3. தேவைப்படுகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அங்கத்தவர்களின் தகவல்களை தாமதமின்றி யும் செயல்திறனுடனும் வழங்குதல். அங்கத்தவர்களைச் செயற்படச் செய்தல், மற்றும் ஆட்சேர்ப்புச் செய்தல், பணம் சேகரித்தல் என்பவற்றுக்கான ஊக்குவிப்புக்குக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உரிய தகவல்களை வழங்கல்.
4. தேவைகளுக்கு அமைய கணனித் தகவல்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல், அறிக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
5. நிறுவனத்தினுள் போன்றே மாவட்ட செயலகங்களில் கணனி வலையமைப்பு முறிவடையும் போது, அது தொடர்பாகத் தேவைப்படும் நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவேற்றுதல்.

### 1.12. 2012 அம் ஆண்டில் மேற் கொண்ட பணிகள்

1. எல்லா விண்ணப்பங்களையும் கணனி பதிவு செய்தல், தவணைக் கட்டன நிகழ்வுகளைக் கணனிப்படுத்தல், மாவட்ட அலுவலகங்களில் இருந்து மேற்கொள்ள முடிகின்றவாறு பழைய ககணனித் தொகுதியை மேம்படுத்தல்.
2. மாவட்ட அலுவலகங்களில் எழுதுவிளைஞர்கள் மற்றும் பயிற்சி ஊழியர்களை தலைமை அலுவலகத்திற்கு அழைத்து புதிய மற்றும் பழைய கணனித் தொகுதியை உபயோகப்படுத்துவது தொடர்பான பயிற்சியை வழஙகுதல்.
3. புதிய கணனித் தொகுதியை மிகப் பயனுடையவாறு பயன்படுத்துவதற்கு முடிகின்ற வகையில் தேவையான வசதிகளை Advarnt Technologies Inc. எனும் நிறுவனத்துடன் இணைந்து நிறைவேற்றுதல்.
4. நாள் தோறும் பழைய மற்றும் புதிய கணனித் தொகுதிகளில் Backup ஐ பெற்றுக் கொண்டு தகவல் தொகுதியைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
5. பல மாவட்ட அலுவலகங்களில் காணப்பட்ட செயற்படாதுள்ள அங்கத்தவர்களை மீண்டும் செயற்படச் செய்யும் நடமாடும் சேவைக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

**ஊழியர் குழு**

| | |
|---|---|
| கணனி செயற்திட்ட அமைப்பாளர் | 01 |
| கணனி செயற்படுத்தனர் | 02 |

## 2. சமூகப் பாதுகாப்பு பிரிவு

### 2.1. பிரதான பணிகள்

- சமூகப் பாதுகாப்பு உத்தேச ஓய்வூதியத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக, அவ் உத்தேச திட்டத்தை செயற்படுத்துகின்ற அதிகாரிகளையும் இலக்காகக் கொண்டுள்ள மக்களையும் விளிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உத்தேச திட்டம் தொடர்பாக விழிப்புணர்வட்டி பின்னர் அங்கத்துவத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பின்னைய தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான வழிகாட்டல்களை மேற்கொண்டு தவணைப்பணச் செலுத்தலுக்கான சேமிப்புப் புத்தகங்கள் வங்கி வரவு அட்டவணைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- அங்கத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல், செயல் இழந்த நிலையில் உள்ள அங்கத்தவர்களை மீண்டும் செயற்படும் நிலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஓய்வூதியம், பகுதி முடமாதல் பிரதிபலன், முழுமையாக முடமாதல் பிரதிபலன் மரணப் பணிக்கொடை போன்ற பிரதிபலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தலைமை அலுவலகத்தின் சமூகப் பாதுகாப்பு மற்றும் 22 மாவட்ட அலுவலகங்களையும் நிருவகித்து சேவை நடவடிக்கைகளைந் செயல்திறனுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- நிறுவனங்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் இயக்கங்கள் ஆகியவற்றை இணைத்து ஓய்வூதிய உத்தேச திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 2.2. சேவை அலகுகளும் மாவட்ட அலுவலகங்களும்

- உறுதிச் சேவை, ஓய்வூதியம், காப்புறுதியும் மேம்பாடும் என்றவாறு தலைமை அலுவலகத்தில் 04 சேவை அலகுகளின் மூலம் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன
- முல்லைத் தீவு, மற்றும் மன்னார் எனும் மாவட்டங்களைத் தவிர மற்றைய எல்லா மாவட்டங்களிலும் மாவட்டச் செயலகங்களில் சேவை அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளது.

### 2.3 உத்தேசத் திட்டத்தை செயற்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்கள்.

- மாவட்ட காரியாலயங்களுக்கு மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்கள், மற்றும் உதவிப் பணிக் குழுவினரும் நியமிக்கப்பட்டுள்ளனர், அவர்களின் மூலம் மாவட்ட செயற்பாடுகளை வழி நடாத்துதல், மற்றும் இணைப்புச் செய்தல், நேரடி ஆட்சேர்ப்புக்கள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொது நிருவாக அமைச்சின் மூலம் வெளியிடப்படுகின்ற சுற்று நிருபங்களுக்கு அமைய மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்களின் மூலம் கிராம உத்தியோகத்தர்களுக்கு கடமைக் கூறு ஒன்றாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன், அந்த உத்தியோகத்தர்களின் மூலம் உத்தேசதிட்டத்தைச் செயற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

- பல்வேறு அமைச்சர்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுத்தும் போது, அவ் உத்தியோகத்தர்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தலைமை அலுவலகத்தின் வழிநடாத்தல் பிரிவின் ஊழியர் குழு**

| பதவிகள் | இருக்கின்றதொகை |
|---|---|
| ★ பிரதி பொது முகாமையாளர் (வழிநடாத்தல்) | 01 |
| ★ உதவி பொது முகாமையாளர்(வழிநடாத்தல்) | 01 |
| ★ முகாமையாளர்கள்/இணைப்பாளர்கள்:- | |
| a. உறுதி தொடர்பான சேவை | 01 |
| b. காப்புறுதி தொடர்பான சேவை | 01 |
| c. ஓய்வூதியம் தொடர்பான சேவை | 01 |
| d. வினியோகித்தல் முகாமையாளர் | 01 |
| e. இணைப்பாளர்கள் | 01 |
| ★ கணனி வேலைத்திட்ட தயாரிப்பாளர் | 01 |
| ★ கணனி இயக்குனர் | 01 |
| ★ எழுதுவினைஞர் | 08 |
| ★ அலுவலக உதவியாளர் | 04 |
| **மொத்தம்** | **20** |

**மாவட்ட அலுவலக ஊழியர் குழு**

| | |
|---|---|
| 1. மாவட்ட இணைப்பாளர்கள் | 27 |
| 2. எழுதுவினைஞர் | 15 |
| 3. அலுவலக உதவியாளர் | 17 |
| **மொத்தம்** | **59** |

## 2.4. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய உத்தேசத் திட்டம்

2012 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் சேர்த்துக் கொள்ளல்

| இல | மாவட்டம்/முகவர் நிறுவனம் | 2012 |
|---|---|---|
| 01 | கொழும்பு | 46 |
| 02 | கம்பஹா | 302 |
| 03 | களுத்துறை | 35 |
| 04 | காலி | 16 |
| 05 | மாத்தரை | 435 |
| 06 | அம்பாந்தோட்டை | 40 |
| 07 | இரத்தினபுரி | 119 |
| 08 | கேகாலை | 74 |
| 09 | கண்டி | 91 |
| 10 | மாத்தளை | 40 |
| 11 | நுவரெலிய | 208 |
| 12 | குருநாகல் | 185 |
| 13 | புத்தளம் | 1368 |
| 14 | பதுளை | 202 |
| 15 | மொனராகலை | 309 |
| 16 | அநுராதபுரம் | 175 |
| 17 | பொலன்னறுவை | 10 |
| 18 | அம்பாரை | 1109 |
| 19 | திருகோணமலை | 04 |
| 20 | மட்டக்களப்பு | 06 |
| 21 | யாழ்ப்பாணம் | 958 |
| 22 | வேறு நேரடி ஆட்சேர்ப்பு | 1719 |
| மொத்தம் | | **7450** |

## 2.5 2012 ஆம் ஆண்டில் பிரதிபலன்கள் செலுத்துதல்கள்

| விபரம் | எண்ணிக்கை | ரூபாய்கள் |
|---|---|---|
| ஓய்வூதியம் செலுத்துதல் | 12252 | 93,254,936 |
| மரணப் பணிக்கொடை செலுத்துதல்கள் | 178 | 3,448,112 |
| முழு முட நிலைக்கான மாதாந்தக் கொடுப்பனவு | 26 | 487,637 |
| முழு முட நிலைக்கான பணிக்கொடை செலுத்தல்கள் | 02 | 60,318 |
| பகுதி முட நிலைக்கான பணிக்கொடை செலுத்தல்கள் | 06 | 93,872 |
| **மொத்தம்** | | **97,334,875** |

## 2.6 2012 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களிடமிருந்து அறவிட்ட பணம்

| அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளல் மற்றும் தவணைப்பணம் அறவிடுதல் தொடர்பாக | தவணைப் பணம் (ரூபா) |
|---|---|
| சேர்த்துக் கொள்ளல்களுக்கான மொத்த தொகை | 11,224,674 |
| வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தவணைப் பணம் | 15,724,269 |
| பிரதேச செயலகங்ளினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தவணைப் பணம் | 89,059,170 |
| தபால் அலுவகங்களினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தவணைப் பணம் | 108,597,312 |
| மொத்தம் | **224,605,425** |

## 2.7 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்றுவித்தல்கள், நடமாடும் சேவை மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத் திட்டங்கள்

| விபரம் | எண்ணிக்கை | செலவு (ரூபா) |
|---|---|---|
| ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அபிவிருத்தி வேளைத்திட்டம் | 21 | 209,117 |
| மாவட்ட மட்டத்தில் அறிமுகப்படுத்தல் வேலைத்திட்டம் | 03 | 14,750 |
| மாவட்ட மட்டத்தில் பரிசளிப்பு விழா வேலைத்திட்டம் | 01 | 41,150 |
| மாவட்ட மட்டத்தில் செயலிழந்த அங்கத்தவர்களை புதுபித்தல் வேலைத்திட்டம் | 40 | 3,219,722 |
| மொத்தம் | | 3,484,739 |

## 2.8. சமூகப் பாதுகாப்பு பிரிவின் பிரச்சினைகள்

- மாவட்ட அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்துள்ள ஊழியர் குழுவினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளதனால் நேரடி தலையீட்டின் கீழ் உத்தேசத் திட்டம் தொடர்பாக விளிப்புணர்வூட்டல், ஆட்சேர்ப்புச் செய்தல், தவணைச் சந்தாக்களைச் சேகரித்தல் என்பவற்றுக்காக சபையின் நேரடிக் கட்டுப்பாட்டில் .ல்லாத அதிகாரிகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்படுதல்.
- (பிரச்சாரம்)விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக போதியளவு நிதி இல்லாமையினால் மின் ஊடக, அச்சு ஊடக மற்றும் பிற விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகள் பலவீனமான மட்டத்தில் இருப்பதுடன், இதன் காரணமாக உத்தேசத் திட்டத்தை பிரசித்தப்படுத்தும் செயற்பாடு மந்த கதியிலேயே இருத்தல்.
- 
- இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு சமமாகச் செயற்படுகின்ற விவசாயிகள் ஓய்வூதிய உத்தேசத் திட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் செலுத்தாததன் காரணமாக கள மட்டத்தில் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுதல் மட்டும் அல்லாமல் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வீழ்ச்சி அடைதல், அத்துடன் பங்களிப்புச் செய்த அங்கத்தவர்கள் தவணைச் சந்தாப் பணம் செலுத்துவதை விட்டுவிடுதல்.

## 3. நிதிப் பிரிவு

### பணிகள்

- கணக்குகளைத் தயாரித்தலும் மற்றும் கணக்கு அறிக்கைகளை உரியவாறு நடைமுறைப்படுத்திச் செல்லலும்.
- ஓய்வூதிய உத்தேச திட்டத்திற்கு பெற்றுக் கொள்கின்ற பணத்தை அதிகளவில் வட்டியைப் பெற்றுக் கொள்ள முடிகின்ற விதத்தில் முதலீடு செய்தல்.
- அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் செலுத்தும் போதும் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்தும் போதும் அவற்றை உரியவாறு பிழையின்றித் தயாரித்தல்.
- வங்கிக் கணக்கை முறையாகப் பேணி நடைமுறைப்படுத்துதல்.
- முகாமைத்துவப் பணிகளுக்காகவும் திரைசேறி மற்றும் அமைச்சிற்கும் தவணைக்கு தவணை சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் கூற்றைத் தயாரித்தல்.
- 1971ஆம் ஆண்டில் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய வருடாந்த நிதிக் கூற்றைத் தயாரித்தல் மற்றும் உரிய அறிக்கையை கணக்காய்வாளருக்குச் சமர்பித்தல்.
- வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல்
- முகாமைத்துவத்திற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தகவலகளை வழங்குதல்.

### 3.1 பொது விடயங்கள்

- அணைத்து காசோலை எழுதல், கணக்குகளைத் தயாரித்தல், பணியும் சம்பளத்தை தயாரித்தல் என்பன கணனிப்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்தம் 18 இலட்சம் அளவு ஓய்வூதியம் செலுத்தப்படுவதுடன், நாடு பூராகவும் அமைந்தள்ள கிராமிய வங்கிகள் 900 இன் ஊடாக ஓய்வூதியம் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.
- தற்போது தீவடங்கிலும் அமைந்துள்ள மக்கள் வங்கி இலங்கை வங்கி, மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றினூடாக அங்கத்தவர்களின் தவணைக் கட்டனங்கள் சேகரிக்கப்படுதல் நிகழ்கின்றது. வெளி நாடுகளில் தொழில் புரிபவர்களுக்காக வதிவிட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றும் (RFC)

### 3.2 நிதிப் பிரிவின் ஊழியர் குழு

| **பதவி** | **தற்போது எண்ணிக்கை** |
|---|---|
| பிரதி பொது முகாமையாளர்(நிதி) | - |
| உதவி பொது முகாமையாளர் (நிதி) | 01 |
| முகாமையாளர் (நிதி) | 01 |
| பணம் அறவிடுபவர் | 01 |
| கணக்குப் பதிவாளர் | 01 |
| எழுதுவிளைஞர் | 04 |
| **மொத்தம்** | **08** |

## 4 உள்ளகக் கணக்காயவுப் பிரிவு

### 4.1 கடமைகள்

நிர்வாகம்

1. ஊழியர் சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பிரத்தியோகக் கோவைகளைப் பரீட்சித்தல்.
2. சம்பளம் மற்றும் வேதனம் செலுத்துதலைப் பரீட்சித்தல்
3. மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்துதலை பரீட்சித்தல்
4. போக்குவரத்து கொடுப்பனவுகளை பரீட்சித்தல்

5. கோள்வனவு செய்தல் மற்றும் வழங்களைப் பரீட்சித்தல்
6. வாகனங்களைப் புதுபித்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளைப் பரீட்சித்தல்
7. தபால்,மின், தொலை தெடர்பு உட்பட ஏனைய எல்லா ஒப்பந்த சேவைகளின் வழங்கலைப் பரீட்சித்தல்
8. சொத்துக்களுக்கு கையொப்பம் பெற்றுக் கொள்ளல், நிருவாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை பரீட்சித்தல்.
9. கடன் மற்றும் முற்பணம் செலுத்தல் போன்றவைகளைப் பரீட்சித்தல்.

**வழிநடாத்தல்**

- பங்களிப்புச் செய்வோர் ஆட்சேர்ப்பு மற்றும் விண்ணப்பப்பத்திரங்களை கணனிப் பதிதல் என்பவற்றை பரீட்சித்தல்
- உறுதிப் பத்திரங்களை வழங்கல்
- தவணைப் பணங்களை அனுப்புதல் மற்றும் கணக்கு பதிதல்
- பிரதிபலன் செலுத்தல் - பணிக்கொடை செலுத்தல்
  - ஓய்வூதியம் செலுத்தல்
- அங்கத்துவத்திலிருந்து நீங்கும் போது பணம் செலுத்துதல்
- களங்களைப் பரீட்சித்த்ல

**விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள்**

**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம்</u>**

| காலாண்டு | கூட்டம் நடாத்தப்பட்ட திகதிகள் |
|---|---|
| முதலாம் காலாண்டு | 2012 மார்ச்சு 08 ஆம் திகதி |
| இரண்டாம் காலாண்டு | 2012 ஜீன் 25 ஆம் திகதி |
| மூன்றாம் காலாண்டு | 2012 செப்தம்பர் 26 ஆம் திகதி |
| நான்காம் காலாண்டு | 2012 நவம்பர் 23 முதல்<br>2012 டிசம்பர் 31 வரை |

# 1. Significant Accounting Policies

## 1.1 General

The Financial Statements of the Board have been prepared on the historical cost basis, in accordance with generally accepted accounting principles applied on a consistent basis and in conformity with Sri Lanka Accounting Standards. No adjustments have been made for inflationary factors affecting the Financial Statements. The accounting policies are consistent with those used in the previous year otherwise specified.

Figures and phrases relating to the previous year have been restated where necessary, to conform to the current year's presentation.

## 1.2 Assets and the Basis of their Valuation

### 1.2.1 Depreciation on Fixed Assets

Tangible assets are shown at cost less accumulated depreciation. Depreciation is charged on the basis of straight-line method at the following rates per annum in order to write off the cost of such assets over their estimated, economic, useful lives. In the case of depreciation on fixed assets, for the year of purchase is fully depreciated and no depreciation will be charged for the year of disposal.

| Item | Rate per Annum |
|---|---|
| Plant, Machinery & Equipment | 25% |
| Furniture & Office Equipment | 10% |
| Vehicles | 20% |
| Computer Accessories & Other Fixed Assets | 25% |
| Communication | 20% |
| Building & Structure | 4% |
| Others | 10% |

### 1.2.2 Inventories

Inventories have been valued at the lower cost or net realized value. Stock is valued at simple average method.

### 1.2.3 Receivables

Receivables are stated at the values estimated to be realized.

### 1.2.4 Investments

Fixed deposits are valued at cost plus accrued interest and WHT. However accrued interest is shown separately.

### 1.2.5 Cash & Cash Equivalents

Cash & Cash equivalents include balances at Banks and Fixed Deposits at Banks and relevant accrued interest components

### 1.2.6 Cash Flow

Cash Flow Statement has been prepared using the 'indirect method'.

## 1.3. Accounting for Grants

Recurrent grants that compensate the Board for expenses incurred are recognized as revenue in the Income statement on a systematic basis in the same period in which the expenses are incurred. Grants that compensate the Board for the cost of an asset is capitalized and amortized as revenue on a systematic basis over the useful lives of the related asset.

## 1.4. Employee Benefits

### 1.4.1 Provision for Gratuity

Provision has been made for the retiring gratuity payable, from the initial year enrolments of all employees in conformity with LKAS 26 Accounting and Reporting by Retirement Benefit Plans. However, under the payment of Gratuity Act No. 12 of 1983, the Liability to an employee arises only on completion of Five years of continued service. The Liability is not externally funded.

### 1.4.2 Define Contribution Plans

Obligations for contributions to Provident and Trust Funds are recognized as an expense in the Income statement as incurred.

## 1.5 Current Liabilities

Current Liabilities are those which fall due for payment on demand within one year from the Balance Sheet date. Non-current liabilities will fall due for payment one year or more after the Balance Sheet date.

### 1.5.2 Taxation

The Board is exempted from Income Tax except Interest Income under Section 143/section143 red with section 158/section 95 of Inland Revenue Act No 10 of 2006.

## 1.6 Post Balance Sheet Events

The materiality of events occurring after the Balance Sheet date has been considered and appropriate adjustments wherever necessary, have been made in the accounts.

## 1.7 Income and Expenditure

### 1.7.1 Revenue Recognition

(a) Enrollment fees and premiums from contributors are accounted on receipt basis whilst interest income is accounted on accrual basis.

(b) All other revenues are taken to Income and Expenditure on accrual basis.

### 1.7.2 Expenditure

(a) All Expenditure incurred in the running of the Board and in maintaining the capital assets in a state of efficiency has been charged to revenue in arriving at the deficit for the year.

(b) All Expenditure incurred in the acquisition, extension or improvement of assets of a permanent nature in order to carry on or increase the earning capacity of the Board has been treated as capital expenditure.

## 1.8. Investments

Investments have been made in Fixed Deposits during the year ended 31st Dec, 2012. Investment Income and administrative expenses are accounted on accrual basis.

85% and 15% of the Investments and interest arising from Investments are shown under Sri Lanka Social Security Pension fund and Sri Lanka Social Security Insurance fund respectively.

From the total collection of 2012 the total amount of Rs.12 Mn has been transferred to the Incentive Fund according to the incentive paid from 2008 to 2012. Balance of Fund is shown as incentive fund as at Balance Sheet date.

Social Security Development Fund is created by total collection from person who exceeded 60 years age and paid only < 25% on their due contribution.

0.5% Interest Income on Fixed Deposit and WHT and Bank Charges have been taken into S.S. Development Fund and S.S. Incentive Fund.

# Sri Lanka Social Security Board

## Balance Sheet as at 31st December 2012

| Assets | Notes-2012 | 2012 (Rs.) | Notes-2011 | 2011(Rs.) |
|---|---|---|---|---|
| **Non-Current Assets** | | | | |
| Property, Plant & Equipment | 01 | 38,236,459 | 1 | 52,788,914 |
| Investment in Fixed Deposit | 2 | 1,519,318,628 | 2 | 1,340,541,216 |
| Rideereka | | 100,000 | | 100,000 |
| Savings Deposit | 3 | 12,669,671 | 4 | 15,882,563 |
| | | 1,570,324,758 | | 1,409,312,693 |
| **Current Assets** | | | | |
| Inventories | 4 | 378,717 | 5 | 103,846 |
| Receivables | 5 | 192,254,933 | 6 | 107,573,449 |
| Deposit, Prepayments & Advances | 6 | 92,000 | 7 | 72,901 |
| Balances at Bank & Cash in hand | 7 | 30,516 | 8 | 224,420 |
| | | **192,756,166** | | **107,974,616** |
| **Less: Current Liabilities** | | | | |
| Cash Book Balance | 13 | 20,708,353 | 14 | 20,251,165 |
| Accounts Payables | 14 | 33,553,016 | 15 | 3,231,440 |
| Receipts in Advance - Security Deposit | | 625 | | 625 |
| | | 54,261,994 | | 23,483,230 |
| **Net Current Assets** | | **138,494,172** | | **84,491,387** |
| **Total Assets** | | **1,708,818,930** | | **1,493,804,079** |
| **Finances By** | | | | |
| Accumulated Fund | 8 | (70,729,807) | 9 | (52,203,706) |
| S.L. Social Security Fund | 9 | 1,429,799,739 | 10 | 1,258,001,328 |
| S.L.Social Security Insurance Fund | 10 | 261,911,666 | 11 | 218,203,139 |
| S.L.Social Security Incentive Fund | 11 | 624,618 | 12 | (8,483,699) |
| Grant for Elders Pension | 12 | 2,547,023 | 13 | 3,097,113 |
| S.L. Social Development Fund | 15 | 4,765,485 | 16 | |
| Government Grant-Capital | 16 | 70,173,930 | | 59,595,930 |
| Government Grant-Capital (Vehicle) | . | | | 7,988,800 |
| | | 1,699,092,655 | | 1,486,198,905 |
| **Non-Current Liabilities** | | | | |
| Provision for Retiring Gratuity | | 9,701,275 | | 7,580,174 |
| Security Service Deposit | | 25,000 | | 25,000 |
| | | 9,726,275 | | 7,605,174 |
| | | 1,708,818,930 | | 1,493,804,079 |

The Accounting Policies and notes as set out in pages 5 to 12 form an integral part of this financial statement.

| | | |
|---|---|---|
| S.N.C.W.M.Dharmakeerthi | Dhammika Padukka | Attorney H.W. Sumana Ariyadasa |
| Assistant General Manager (Fin) | General Manager (Acting ) | Chairperson |
| 26th Feb 2013 | | |

## Sri Lanka Social Security Board
## Income & expenditure A/C
## for the year ended 31st December 2012

(Rs)

| | | Notes-2012 | 2012 | Notes-2011 | 2011 |
|---|---|---|---|---|---|
| **Revenue** | | | | | |
| | Government Grant - Recurrent | | 71,138,900 | | 62,603,000 |
| | Loan to fund | | 2,830,000 | | 970,000 |
| | Loan interest (Special Advance Interest) | | 1,699 | | 1,469 |
| | Other Income | 23 | 577,303 | | 785,114 |
| | | | **74,547,902** | | **64,359,583** |
| **Less: Expenses** | | | | | |
